# +2 முடித்த மாணவர்கள்

# என்ன படிக்கலாம்...
# எங்கு படிக்கலாம்...

புதுகை
**வரலாறு**
நாளிதழ்

## கல்விக் கண்காட்சியில்

# லேப்டாப் பரிசு

**ஏப்ரல் 8,9**

**அனைவரும் வாரீர்... அனுமதி இலவசம்..!**

**இடம்: விஜய் பேலஸ், புதுக்கோட்டை**

**தொடர்புக்கு : 98420 98534 / 63833 51422**





புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM  VARALARUU  PUDUGAIVARALARU  VARALARUU  7502051351







## புதிய நிலக்கரி சுரங்க விவகாரத்தில் முதல்வர் ஸ்டாலின் விளக்கம்

# "நானும் டெல்டாதான்"

## தமிழகத்தின் நெற்களஞ்சியமான டெல்டா மாவட்டங்களில் ஒருபோதும் இதுபோன்ற திட்டங்களை அரசு அனுமதிக்காது; முதல்வர் மு.க.ஸ்டாலின்





சென்னை, ஏப். 06–

டெல்டா மாவட்டங்களில் புதிய நிலக்கரி சுரங்கம் அமைக்க தமிழக அரசு அனுமதி அளிக்காது என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள சேத்தியாத்தோப்பு, மைக்கேல்பட்டி, வடசேரியில் தனியார் மூலம் நிலக்கரி சுரங்கம் அமைப்பதற்கான ஏல அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. இது ஒட்டுமொத்த டெல்டா பகுதி விவசாயிகளிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் இதற்கு கண்டனம் தெரிவித்துள்ளதுடன், நிலக்கரி சுரங்கங்கள் அமைக்கும் முயற்சியை மத்திய அரசு கைவிட வேண்டும் என்றும், இது தொடர்பாக மத்திய அரசுக்கு, தமிழக அரசு அழுத்தம் தர வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், நிலக்கரி சுரங்க ஏல ஒப்பந்த நடைமுறையில் இருந்து காவிரி டெல்டா பகுதிகளை விலக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதி இருந்தார். இந்நிலையில், டெல்டா பகுதியில் நிலக்கரி சுரங்கம் அமைக்க மத்திய அரசு வெளியிட்ட ஏல அறிவிப்புக்கு எதிராக தமிழக சட்டப்பேரவையில் அனைத்து கட்சி உறுப்பினர்கள் சார்பில் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

இதற்குப் பதில் அளித்த தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு,"டெல்டாவில் நிலக்கரி சுரங்க ஏல விவகாரத்தில் முதல்வர் வேகமாக செயல்பட்டு, உடனடியாக பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார். நிலக்கரி அமைச்சகத்திடம் வலியுறுத்திய அதிகாரிகளும் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டாம் எனக் கூறியுள்ளனர். தமிழக அரசு ஒருபோதும் இத்திட்டத்தை அனுமதிக்காது என்பதை திட்டவட்டமாக கூறுகிறோம்." என்றார்.

இதனைத்தொடர்ந்து சட்டப்பேரவையில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், "இந்த செய்தி வந்தபோது உங்களைப் போன்று தான் நானும் அதிர்ச்சி அடைந்தேன். செய்தியைப் பார்த்த உடன் அதிகாரிகளுடன் பேசி, உடனடியாக பிரதமருக்கு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தின் நகலை அமைச்சரிடம் அளிக்க வேண்டும் என்று திமுக நாடாளுமன்ற குழுத் தலைவரிடம் கூறி இருக்கிறேன். நானும் டெல்டாகாரன் தான். உங்களைப் போன்று நானும் உறுதியாக இருப்பேன். எந்தக் காரணத்தைக்கொண்டும் தமிழக அரசு இதற்கு அனுமதி அளிக்காது." என்று கூறினார்.

# நிலக்கரி சுரங்கப் பிரச்சினை தீரா இபிஎஸ் யோசனை



சென்னை , ஏப். 06–

"நிலக்கரி சுரங்க விவகாரத்தை, திமுக எம்பிக்கள் நாடாளுமன்றத்தில் எழுப்ப வேண்டும். அப்போதுதான் இந்த பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும். அதை விடுத்துகடிதம்எழுதுவது, அமைச்சரை சந்தித்தார் என்பதெல்லாம் வெறும் சாக்குபோக்கு சொல்வதுதான்" என்று சட்டமன்றஎதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சட்டப்பேரவை வளாகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "ஏற்கெனவே என்எல்சி நிறுவனத்துக்காக கிட்டத்தட்ட 105 கிராமங்களில் நிலம் கையகப்படுத்தப் பட்டுவிட்டன. அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளை அங்கிருந்து அப்புறப்படுத்தும் சூழலில், இன்றைக்கு மூன்று இடங்களில் புதிதாகநிலக்கரிசுரங்கம் அமைக்க டெண்டர் கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது, விவசாயிகள் மத்தியில்கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டத்தில் வடசேரி, கடலூர் மாவட்டம் புவனகிரி வட்டம் சேத்தியாத்தோப்பு கிழக்கு பகுதி, மற்றும் அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டம்மைக்கேல்பட்டி ஆகிய 3 இடங்களில் நிலக்கரி சுரங்கம் அமைக்க டெண்டர் கோரப்பட்டுள்ளதாக செய்திகள் வந்திருக்கின்றன.

அதிமுக ஆட்சிக்காலத்தில் டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலங்களாக அறிவிக்கப்பட்டது. தமிழக மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்கிறது இந்த டெல்டா மாவட்டம். அந்தப் பகுதியில் விவசாயிகளை பாதிக்கும்வகையில்எந்த தொழிற்சாலைகளும் அமைக்கக்கூடாது என்பதுதான் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலங்களின் முக்கிய அம்சம். இந்நிலையில் மத்திய அரசு இந்த பகுதியில் 3 இடங்களில் நிலக்கரி சுரங்கம் அமைக்க டெண்டர் கோரியிருக்கும் செய்தி, வேதனையையும், வருத்தத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனால், 2022ல் திமுக எம்பி நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு மத்திய அமைச்சர் பதிலளித்திருக்கிறார். அப்போதே இந்தப் பகுதியில் நிலக்கரி சுரங்கம் அமைக்கப்படவிருந்தது குறித்த செய்தி தெரியவந்துள்ளது. திமுக அரசு அந்த சமயத்திலேயே மத்திய அரசுடன் பேசி இதைத் தடுப்பதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கலாம். ஆனால், இந்த அரசு அதை செய்ய தவறிவிட்டது.

திமுகஆட்சியில்தான் மீத்தேன் எடுப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. தமிழகத்தில் விவசாயிகள் பாதிக்கப்படுவதற்கான ஒரு வழி திறந்துவிடப்பட்டது திமுக ஆட்சியில்தான். இதிலிருந்துதான் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். திமுக அரசு அந்த சமயத்தில் இதை தடுத்திருந்ததால், மத்திய அரசு இந்த திட்டத்தை தற்போது செய்திருக்க மாட்டார்கள். எனவே இதற்கு காரணம் திமுக அரசுதான்.

தமிழக அரசாங்கம் தொடர்புடைய பிரச்சினையாக இருந்தால், சட்டமன்றத்தில் பேசலாம். இது மத்திய அரசு தொடர்புடைய பிரச்சினை. எனவே முதல்வர் வெறுமனே கடிதம் எழுதினால் போதாது. நான் முதல்வராக இருந்த சமயத்தில், அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த முதல்வர் ஸ்டாலின், ஊடகங்களில், மத்திய அரசுக்கு நான் எதற்கெடுத்தாலும் கடிதம் எழுதுவதாக கூறுவார். ஆனால், தற்போது முதல்வர் என்ன செய்து கொண்டிருக்கிறார். அவரும் இப்போது கடிதம்தான் எழுதிக் கொண்டிருக்கிறார்.

திமுகவுக்கு 38 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இது ஒரு மிகப்பெரிய பிரச்சினை, வாழ்வாதார பிரச்சினை. எனவே திமுக எம்பிக்கள் இந்தப் பிரச்சினையை நாடாளுமன்றத்தில் எழுப்ப வேண்டும். அப்போதுதான் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும். அதைவிடுத்து கடிதம் எழுதுவது, அமைச்சரை சந்தித்தார் என்பதெல்லாம் வெறும் சாக்குபோக்கு சொல்வதுதான்" என்று அவர் கூறினார்.




# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# அரியலூரில் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் முப்பெரும் விழா



அரியலூர்,ஏப்.6–

அரியலூரில் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில், முப்பெரும் விழா நடைபெற்றது.

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி அரியலூர் வட்டாரக் கிளை சார்பில், அரியலூர் கருணாஸ் ஹோட்டலில் நடைபெற்ற, ஓய்வு பெற்ற முன்னாள் பொறுப்பாளர்களுக்கு பாராட்டு விழா, பொதுச் செயலாளருக்கு பாராட்டு விழா, உலக தமிழாசிரியர் பேரவை பொதுச் செயலாளர் தேர்வு உள்ளிட்ட முப்பெரும் விழாவுக்கு, சங்கத்தின் அரியலூர் வட்டாரத் தலைவர் அருள்ஜோதி தலைமை வகித்தார், வட்டார செயலாளர் மற்றும் மாவட்டத் துணைத் தலைவர் ஆ.சண்முகம் வரவேற்று பேசினார். சிவபாக்கியம், அம்சவல்லி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

பணி நிறைவு பெறும் சங்க ஆசிரியர் அசோகன், மங்கையர்க்கரசி, சுடர்மணி, கிராஸ் மேரி மற்றும் மாநில, மாவட்ட பொறுப்பாளர்களை வாழ்த்தி, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில பொதுச் செயலாளர் ந. ரங்கராஜன் சிறப்புரை ஆற்றினார், சங்கத்தின் மாநில துணைத்தலைவர் மற்றும் மாவட்ட செயலாளர் எழில், மாநிலத் துணைச் செயலாளர் மற்றும் பெரம்பலூர் மாவட்ட செயலாளர் ராஜேந்திரன், வட்டாரத் தலைவர்கள் அருமைக் கண்ணு, சிவமூர்த்தி, வேல்மணி, ரவிச்சந்திரன், ஓய்வு பெற்ற முன்னாள் பொறுப்பாளர்கள் விக்டர், முருகேசன், குடியரசன், ராமராஜ் மீனாட்சி உள்ளிட்டோர் பேசினர். சங்கத்தின் அரியலூர் மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டாரப் பொறுப்பாளர்கள், வட்டார செயற்குழு உறுப்பினர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், உள்ளிட்ட பலர் பங்கேற்ற விழா முடிவில், வட்டார பொருளாளர் தஸ்தகீர் நன்றி கூறினார்.



▶ பி.கே.மூக்கையா-வின் 100வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாவட்டம் உசிலம்பட்டி முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியில் அமைந்துள்ள பி.கே.மூக்கையா-வின் மணிமண்டபத்தில் மூவேந்தர் முன்னேற்ற கழகம் சார்பில் மாநில மகளிரணி செயலாளர் சுந்தரச்செல்வி, ஒச்சாத்தேவர் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ராகேஷ் ஒச்சாத்தேவர், புறநகர் மாவட்ட செயலாளர் குட்டி எஸ்.ஞானசீலன், மாநகர் மாவட்ட செயலாளர் காளி, மாவட்டத் தலைவர் ஜெயம் லோகேஷ், கனகராஜ், விஜயன், கதிர்தேவன், சேகர் மற்றும் நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




### உளுந்தூர்பேட்டையில் பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு

# 1000–க்கும் மேற்பட்ட பக்தர்கள் பால்குடம் மற்றும் காவடி எடுத்து நேர்த்திக்கடன்



கள்ளக்குறிச்சி, ஏப்,06_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகராட்சியில், அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பால தண்டாயுதபாணி முருகன் திருக்கோவிலில் பங்குனி உத்திர திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்து அறநிலைத்துறை கட்டுப்பாட்டில் உள்ள அருள்மிகு ஸ்ரீ பால தண்டாயுதபாணி முருகன் திருக்கோவில் பங்குனி உத்திர திருவிழா நகராட்சி நிர்வாகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டு, ஒவ்வொரு நாளும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளான நாட்டியாஞ்சலி, பட்டிமன்றம், இன்னிசைக் கச்சேரி உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பங்குனி உத்திர திருநாளான நேற்று 1000–க்கும் மேற்பட்ட பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பால்குடம் மற்றும் காவடி எடுத்து முக்கிய வீதிகள் வழியாக சென்று கோவிலில் பால தண்டாயுதபாணிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை செய்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர். இவ்விழாவில் பல்வேறு அரசியல் கட்சியினர் மற்றும் சமூக ஆர்வலர்கள் தனியார் நிறுவனங்கள், காலை முதல் மாலை வரை அன்னதானம், மோர், இளநீர், உள்ளிட்டவைகளை பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு வழங்கினர்.

### சர்வதேச ஆண்கள் டி20 கிரிக்கெட்டில்

# கள நடுவராக பணியாற்றி வரலாற்று சாதனை படைத்த முதல் பெண்



டுனிடின், ஏப்.6–

சர்வதேச ஆடவர் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான டி20 போட்டியில் முதல் பெண் கள நடுவராக செயல்பட்டுள்ளார் கிம் காட்டன் நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் விளையாடி வருகிறது. டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரிலும் நியூசிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் வென்றது. 2-வது ஒருநாள் போட்டி மழை காரணமாக ரத்து செய்யப்பட்டது. இதனையடுத்து இரு அணிகளும் டி20 போட்டியில் மோதி வருகின்றனர். முதல் போட்டியில் இலங்கை சூப்பர் ஓவரில் வெற்றி பெற்று இருந்தது. இந்நிலையில் 2-வது போட்டி நேற்று நடைபெற்றது.

இதில் நியூசிலாந்து அணி 1 விக்கெட் இழப்புக்கு 146 ரன் எடுத்து 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த போட்டியில் பெண் நடுவராக கிம் காட்டன் செயல்பட்டார். இரு ஆடவர் அணிகளுக்கு இடையேயான சர்வதேச போட்டியில் நடுவராக பணியாற்றிய முதல் பெண் நடுவர் என்ற வரலாற்று சாதனையை இவர் படைத்துள்ளார், அவர் வெய்ன் நைட்ஸுடன் கள நடுவராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### இலங்கை கடற்படை மீண்டும் அட்டூழியம்

# காரைக்கால் மீனவர்களை தாக்கி பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட பொருட்களையும் அள்ளிச் சென்றதாக மீனவர்கள் புகார்



காரைக்கால்,ஏப்,6

காரைக்கால் மாவட்டம் கிளிஞ்சல் மேடு மீனவ கிராமத்தைச் சேர்ந்த செல்லதுரை என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் காரைக்கால் மீன் பிடித் துறைமுகத்திலிருந்து கடந்த 1ம் தேதி காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த இவாஸ், அஜித், மனோ, சிவசங்கரன், ராம் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த கலியமூர்த்தி, ஆறுமுகம், சிவகுரு, கோவிந்தன் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த மெஜின், கார்த்தி ஆகிய 12 மீனவர்கள் மீன்பிடிக்க சென்றனர்.

நேற்று அதிகாலை இந்திய எல்லை பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படை படகில் ஏறியிருந்த மீனவர்களை தாக்கி அவர்களது படகில் இருந்த பொருட்களை சேதப்படுத்தியதோடு திசை காட்டும் கருவி, மீன் பிடிக்க பயன்படுத்தப்படும் வலைகள், மீன்பிடிக்க பயன்படுத்தப்படும் பலகைகள், ஐந்து லட்சம் மதிப்பிலான மீன்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை படகில் இருந்து எடுத்துச் சென்றுள்ளனர். மீனவர்களின் படகுகளில் இருந்த ஐஸ் அள்ள பயன்படுத்தக்கூடிய சவுல் எனப்படும் இரும்புராடால் பலமாக தாக்கியுள்ளனர். இதில் மீனவர்கள் பலத்த காயம் அடைந்துள்ளனர்.

அருகில் இருந்த படகில் இருந்தவர்கள் இந்திய கடற்படையினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு வந்த இந்திய கடற்படையினர் அந்த மீனவர்களை இலங்கை கடற்படையில் இருந்து மீட்டு அவர்களுக்கு இந்திய கடற்படையினர் முதலுதவி அளித்து தற்போது அந்த 12 மீனவர்களும் காரைக்கால் மீன் துறைமுகத்திற்கு வந்துள்ளனர். கரை திரும்பிய மீனவர்கள் இரக்கம் இல்லாமல் இலங்கை கடற்படையினர் தங்களை துப்பாக்கி முனையில் வைத்து தாக்கியதாகவும் இதில் 5 க்கும் மேற்பட்ட மீனவர்கள் காயம் அடைந்ததாகவும் கண்ணீர் மல்க தெரிவித்தனர்.

தொடர்ந்து மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கி வருவது தொடர்கதையாக இருப்பதாகவும் இதற்கு உடனடியாக மத்திய மாநில அரசுகள் தலையிட்டு உரிய தீர்வினை அளிக்க வேண்டும் எனவும் மீனவப் பிரதிநிதிகள் மத்திய மாநில அரசுகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். இந்திய கடற்படையினரால் முதலுதவி அளிக்கப்பட்ட மீனவர்கள் சிகிச்சைக்காக காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# கொருக்குப்பேட்டை அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்தில் பங்குனி உத்திர திருவிழா





சென்னை, ஏப் 6 –

சென்னை, கொருக்குப்பேட்டை பாரதி நகர் இரண்டாவது தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்தில் 50 ஆம் ஆண்டு பங்குனி உத்திர திருவிழா மார்ச் மாதம் 25 ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.

அதை முன்னிட்டு 25:03:2023 சனிக்கிழமை காலை 9 மணி அளவில் அனைத்து பக்தர்களும், மாதர்களும், பொதுமக்களும் கலந்து கொண்ட பால்குடம் ஊர்வலம் நடைபெற்றது. இந்த ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் பால்குடம், பன்னீர் குடம் ஏந்தி ஸ்ரீ பத்ரகாளி அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை 31:03:2023 அன்று திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இதில் 175 பக்தர்கள் கலந்து



கொண்டனர். திருவிளக்கு பூஜையில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் பிரசாதம், புடவை, ஜாக்கெட் உள்ளிட்ட ஏராளமான பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது.

நேற்று பங்குனி உத்திரத்தை முன்னிட்டு பத்ரகாளியம்மன் திருவீதி உலா நடைபெற்றது. மேலும் பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடன் செலுத்தி பொங்கல் வைத்து வழிபட்டனர். மாலையில் அக்னி சட்டி கரத்தில் ஏந்தி ஏராளமான பக்தர்கள் ஊர்வலம் வந்து தங்கள் நேர்த்திக் கடன் செலுத்தினர்.

பத்ரகாளியம்மன் ஆலய மாதர்கள் சரோஜினி, ஆறுமுக கனி, இந்திராணி, கலா என்கிற தனலட்சுமி, எஸ்.தனலட்சுமி, மகேஸ்வரி, பிரேமா, பவுன்தாய், லட்சுமி, தேவி, பவானி, லட்சுமி, இந்துமதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐம்பதாம் ஆண்டு பங்குனி உத்திர திருவிழாவை திருவிழா அமைப்பாளர்களான பி. மணிவண்ணன், கு.பெரியசாமி, புதுகை வரலாறு நாளிதழ் உதவி ஆசிரியர் த.சீனிவாசன், டி.பிச்சைமணி, ஜி.சீனிவாசன் பி.சிவக்குமார், எம்.பி.ஆர். ராஜன், சி.ரவிச்சந்திரன், சி.அசோகன், ஆர்.சீனிவாசன், கே.ராஜேந்திரன் ஆகியோர் முன்நின்று நடத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நீர்நிலை ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி வாலிபர் செல்போன் டவரில் ஏறி நூதனப் போராட்டம்



தரங்கம்பாடி, ஏப்- 05:

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா இலுப்பூர் கிராமத்தைச் சேர்ந்த கலியமூர்த்தி மகன் கதிரவன் (37) சமூக ஆர்வலரான இவர் இலுப்பூர் ஊராட்சியில் நீர்நிலை மற்றும் அதன் வழிகளை மீட்கவும் நீராதார சங்கிலியை பாதுகாத்திட வேண்டியும் பல்வேறு போராட்டத்தில் ஈடுபட்டார்.

அரசு அதிகாரிகள் போராட்டத்தின் போது பேச்சு வார்த்தை நடத்தினார், தவிர நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றவில்லை இந்நிலையில் கதிரவன் சங்கரன்பந்தல் வீரசோழன் ஆற்றின் அருகே உள்ள செல்போன் டவரில் ஏறி தனது கோரிக்கையை உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தி நூதன முறையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

மேலும் அவர் கோரிக்கையை நிறைவேற்றும் வரை உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட போவதாகவும் தெரிவித்தார். இது குறித்து தகவல் அறிந்து வந்த சீர்காழி காவல் துணை கண்காணிப்பாளர் லாமேக், வட்டாட்சியர் காந்திமதி, பொறையாறு காவல் ஆய்வாளர் சிங்காரவேல், மற்றும் தீயணைப்பு மீட்பு படையினர் சம்பவ இடத்திற்கு வந்து கதிரவனிடம் முதற்கட்ட பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர்.

ஆனால் அதற்கு கதிரவன் உடன்படாததால் போராட்டம் நீடித்தது, தகவல் அறிந்த மாவட்ட ஆட்சியர் மகாபாரதி தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர் வைத்த கோரிக்கையை நிறைவேற்றி தருவதாக தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்தார். அதன் அடிப்படையில் கதிரவன் தனது போராட்டத்தை கைவிட்டு செல்போன் டவரில் இருந்து இறங்கி வந்து பேச்சு வார்த்தையில் ஈடுபட்டார். நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றி நடவடிக்கை எடுப்பதாக அரசு அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இலுப்பூர் ஊராட்சியில் உள்ள 6 குளங்களை பொறையார் காவல்துறையினர் பாதுகாப்புடன் நில அளவையாளர், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆக்கிரமிப்புகளை மீட்டெடுத்தனர். கதிரவனின் இந்த போராட்டம் அப்பகுதி மக்களிடம் பரபரப்பு ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

### பாரி விநாயகர் கோயிலில்

# பங்குனி உத்திர விழா திரளான பக்தர்கள் வழிபாடு



புதுக்கோட்டை, ஏப்.6–

புதுக்கோட்டை கவிநாடு மேற்கு ஊராட்சிக்குட்பட்ட பாரிநகரில் உள்ள அருள்மிகு பாரி விநாயகர் கோயிலில் பங்குனி உத்திர விழா விமரிசையாக நடைபெற்றது. இதையொட்டி கோயிலில் வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமானுக்கு சிறப்பு அலங்காரம் செய்து பூஜைகள் மற்றும் ஆராதனைகள் நடைபெற்றன.

இதையொட்டி பாரி விநாயகர் ஆலய அறங்காவலர் குழு சார்பில் 19 –ஆவது ஆண்டாக நடைபெற்ற அன்னதான விழாவில், கவிநாடு மேற்கு ஊராட்சிமன்றத்தலைவர் மணி மற்றும் பாரி நகர், மாலையீடு. சாரதா, கார்டன், சேங்கைதோப்பு உள்ளிட்ட பகுதிகளைச் சார்ந்த பொதுமக்கள், பக்தர்கள் திரளானோர் பங்கேற்றனர். பங்குனி உத்திர நாளின் சிறப்புகள் குறித்து கோயில் அர்ச்சகர் மணி குருக்கள் கூறினார்.

விழா ஏற்பாடுகளை, அருள்மிகு பாரிவிநாயகர் ஆலய அறங்காவலர் குழு மற்றும், பாரி நகர் மக்கள் நலச்சங்க தலைவர் ஆர். செந்தில்தேவன், செயலர் ஆர். சேகர், பொருளாளர் கே. ரவி உள்ளிட்ட நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# பழமை வாய்ந்த ஸ்ரீநடன காளியம்மன் கோயில் தீமிதி திருவிழா





காரைக்கால்,ஏப்,6

காரைக்கால் மாவட்டம் திருமலைராயன் பட்டினத்தில் பழமை வாய்ந்த ஸ்ரீ நடன காளியம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்தில் தீமிதி திருவிழா நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு தீமிதி திருவிழாவையொட்டி கடந்த நான்கு நாட்களாக அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது.

அதனை தொடர்ந்து அம்மன் பல்வேறு வாகனங்களில் வீதியுலா நிகழ்ச்சியும் நடைபெற்றது. முக்கிய நிகழ்ச்சி நாளான நேற்று வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட நடன காளியம்மன் தீக்குழி அருகே எழுந்தருளி தீமிதி நடைபெற்றது. இதில் 100–க்கும் மேற்பட்ட பக்தர்கள் தீமிதித்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன் உட்பட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனின் அருள் பெற்றனர். தீமிதிக்குப் பின்னர் அம்மனுக்கு மகா தீபாராதனை காட்டப்பட்டு அம்மன் நடனமாடி கோயிலுக்குள் செல்லும் காட்சியை ஏராளமான பக்தர்கள் கூடியிருந்து கண்டுரசித்தனர். அலகுகாவடி எடுக்கும் பக்தர்கள் பக்தி பரவசத்தோடு நடனமாடியது, கூடியிருந்த பக்தர்களை பரவசத்தில் ஆழ்த்தியது.

# அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் கைதுக்கு பிறகு ஆதரவாளர்களிடையே ஆவேச பேச்சு

வாஷிங்டன், ஏப். 6 -

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டிரம்ப் மீது 10-க்கும் மேற்பட்ட பெண்கள் பாலியல் புகார் தெரிவித்தனர். அதற்கான வீடியோ ஆதாரங்களையும் வெளியிட்டு இருந்தனர். இதனிடையே ஆபாச பட நடிகை ஒருவர் டிரம்புடனான உறவு குறித்து அவர் வெளியிட்ட புத்தகத்தில் பதிவு செய்திருந்தார்.

இந்த குற்றச்சாட்டை டிரம்ப் திட்டவட்டமாக மறுத்தாலும், கடந்த 2016-ம் ஆண்டு, ஜனாதிபதி தேர்தல் சமயத்தில், இந்த குற்றச்சாட்டு வெளியாகியிருந்தது. அதனால், அதன் தாக்கம் தேர்தலில் அதிகமாக எதிரொலிக்கவே செய்தது. ஆபாச நடிகையுடனான உறவை மூடிமறைக்க, சம்பந்தப்பட்ட நடிகைக்கு டிரம்ப் பெருந்தொகை அளித்தது மற்றும் 34 பொய்யான வணிகப் பதிவுகள் வைத்தது ஆகியவை தொடர்பான குற்றச்சாட்டுகள் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மீது சுமத்தப்பட்டது.

இது தொடர்பான வழக்கில் விசாரணைக்கு டொனால்டு டிரம்ப், லோயர் மன்ஹாட்டன் நீதிமன்றத்தில் ஆஜரான நிலையில், அங்கு அவர் முறைப்படி கைது செய்யப்பட்டார். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி என்ற முறையில் டிரம்ப்-க்கு கைவிலங்குகள் இடப்படவில்லை, ஆனால் மாறாக குற்றவாளிகளின் கைவிரல் அடையாளங்கள் பதிவு செய்யப்படும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்நிலையில், இதுவரை எந்த அமெரிக்க ஜனாதிபதியும் எதிர்கொள்ளாத கிரிமினல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள முதல் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தனது புளோரிடா தோட்டத்தில் அவரது நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் முன் உரையாற்றினார்.

ஒரு அமெரிக்கராக இருப்பதில் பெருமைப்படுகிறேன், அமெரிக்காவில் இதுபோன்று எதுவும் நடக்கும் என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை. நான் செய்த ஒரே குற்றம், நம் தேசத்தை அழிக்க நினைப்பவர்களிடம் இருந்து அச்சமின்றி நாட்டை பாதுகாப்பதுதான்" அமெரிக்கா நரகத்திற்கு போகிறது எனக்கு பெரிய ரசிகர்களாக இல்லாதவர்கள் கூட, இப்படி நடந்து இருக்க கூடாது என கூறுகின்றனர். தான் இப்போது எதிர்கொள்வது "தேர்தல் குறுக்கீடு", வரவிருக்கும் 2024 தேர்தலில் குறுக்கீடுகளை ஏற்படுத்தவே இந்த பொய் வழக்குகள் என் மீது சுமத்தப்பட்டுள்ளது, இதனை உடனடியாக கைவிட வேண்டும் என்று டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.



காரைக்கால் மாவட்டத்தில் பதினொன்றாம் வகுப்பு பொதுத் தேர்வு நேற்று முடிவடைந்தது. இதனால் இந்த நிலையில் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன், அன்னை தெரசா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பரீட்சை எழுதும் மாணவர்களை பார்வையிட்டார். தேர்வு எழுதும் மாணவர்களின் வருகை குறித்தும் ஆசிரியர்களின் வருகை குறித்தும் ஆட்சியர் கேட்டறிந்தார். மேலும் தேர்வு எழுதும் மாற்றுத்திறனாளிகளை பாராட்டினார். உடன் மேல்நிலைக் கல்வித் துணை இயக்குனர் ராஜேஸ்வரி, மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி ராஜசேகரன் மற்றும் ஆசிரியர்கள் உடன் இருந்தனர்.



உதவிக்கான கைகள் சமூக சேவை அல்லது விலங்குகள் நலக்குழு சார்பில் கோடை காலத்தில் பறவைகள் குடிக்க தண்ணீர் தொட்டிகள் 150 சிறுவர் சிறுமிகளுக்கு வழங்கப்பட்டது உதவிக்கான கைகள் சமூக சேவை மற்றும் விலங்குகள் நலக்குழு சார்பில் சென்னை, சவுகார்பேட்டையில் உள்ள ஸ்ரீ வர்தமான் ஜெயின் தத்துவ மையம் சமயப் பள்ளியில் மகாவீர் ஸ்வாமியின் பிறந்தநாளான, ஜெயின் சமூகத்தால் கொண்டாடப்படும் மிகவும் புனிதமான நாட்களில் ஒன்றாகும். மகாவீர ஸ்வாமி உலக அமைதி மற்றும் ஜெயின் சமூகத்தின் நல்லிணக்கத்தின் "வாழுங்கள் வாழ விடுங்கள்" இறைவன் மகாவீரரின் செய்திக்கேற்ப கோடை காலத்தில் பறவைகள் குடிக்க தண்ணீர் தொட்டிகள் தானியங்களை ஊற்ற 150 சிறுவர் சிறுமிகளுக்கு அறிவுரை கூறி வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் டி.சி. ஜெயின், உதவிக்கான கரங்கள் மற்றும் நூதன் பாத்ஷாலாவின் பிரதிநிதிகள் பெற்றோர்கள் சிறுவர் சிறுமியர் என பலர் கலந்து கொண்டனர்.

# காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலத்துங்கன் பல்வேறு பகுதிகளில் திடீர் ஆய்வு

காரைக்கால்,ஏப்,6

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலத்துங்கன் நேற்று பல்வேறு பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார். முதலில் காரைக்கால் மாவட்டம் கீழ காசாக்குடியில் அம்ருத் திட்டத்தின் மூலம் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் 12 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டடுக்கு நீர் சேர்க்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வரவுள்ள நிலையில் அந்த நீர்தேக்க தொட்டியை ஆய்வு மேற்கொண்டார்.



மேலும் அந்த கட்டடத்திற்கு உயர் மின் அழுத்த இணைப்பை விரைவில் மின்துறை அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து பெருமாறு பொதுப்பணித்துறை அதிகாரிகளை கேட்டுக் கொண்டார். புளியங்கொட்டை சாலை முதல் வானொலி நிலையம் வரை சாலை மேம்படுத்தும் பணியை பார்வையிட்ட ஆட்சியர், அந்த பணியை விரைந்து முடிக்கும் படி அதிகாரிகளை கேட்டுக் கொண்டார், பிறகு காரைக்கால் கடற்கரை சாலையை மேம்படுத்துவது குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

அதன் பிறகு கீழ காசாக்குடியில் தரைத்தளத்தில் இயங்கிவரும் ஆண்கள் விடுதியை பார்வையிட்ட ஆட்சியர் அங்கு மாணவர்களுக்கு தயாரிக்கப்படும் சமையல் கூடத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் மாணவர்களுக்கு அங்கு சமைக்கப்படும் உணவுகளை சாப்பிட்டு சரிபார்த்து மாணவர்களுக்கு நல்ல நிலையில் உணவுகள் வழங்குமாறும் உணவு தயாரிக்கும் இடத்தை சுத்தமாக பராமரிக்குமாறும் அதிகாரிகளை கேட்டுக் கொண்டார். மேலும் முதல் தளத்தில் கட்டி முடியும் தருவாயில் உள்ள விடுதி இடத்தையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் ஆதி திராவிடர் நலத்துறை உதவி இயக்குனர் மதன்குமார் மற்றும் பொதுப்பணி துறையைச் சார்ந்த செயற்பொறியாளர்கள் வீரசெல்வம் மற்றும் சந்திரசேகர் மேலும் ஜெயராமன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# அரக்கோணம் அருகே பாம்பின் தலையை கடித்து துப்பிய 3 பேர் கைது

சென்னை,ஏப்.6-

சமூக வலைதளங்களில் பரவ வேண்டும் என்பதற்காக பாம்பின் தலையை கடித்து துப்பிய 3 பேரை வனத்துறையினர் கைது செய்தனர்.

சமூக ஊடக உலகம் ஆச்சரியமான உலகமாகும். இங்கே நாம் கற்பனை செய்து கூட பார்க்க முடியாத பல விஷயங்களை காண்கிறோம். இணையத்தில் நாம் காணும் வீடியோக்களில் பல விஷயங்கள் நம்மை சில சமயம் சிரிக்க வைக்கின்றன, சில சமயம் சிந்திக்க வைக்கின்றன, சில சமயம் ஆச்சரியப்பட வைக்கின்றன, சில சமயம் அதிர்ச்சியில் ஆழ்த்துகின்றன, சில சமயம் சோகத்தையும் சேர்க்கின்றன.

இந்நிலையில், ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் அருகே சின்ன கைனூர் கிராமத்தை சேர்ந்தவர்கள் மோகன்(30), சூர்யா(21), சந்தோஷ்(20)விவசாய கூலி தொழிலாளர்கள், இவர்கள் மூன்று பேரும் சின்ன கைனூர் ஏரிக்கரையோரம் சுற்றிக்கொண்டிந்த தண்ணிப்பாம்பை பிடித்தனர். பின் அதை மூவரும் கைகளால் ஒன்றாக பிடித்து வாயால் கடித்து கொன்று துப்பினர். இந்த காட்சி வீடியோவாக சமூக வளைதலங்களில் வைரலாக பரவியது. இது தொடர்பாக ஆற்காடு வனச்சரக அலுவலர் சரவணபாபு விசாரணை நடத்தி மூவரையும் நேற்று கைது செய்து மருத்துவ பரிசோதனைக்கு பிறகு வேலூர் மத்திய ஆண்கள் சிறையில் அடைத்தனர். கைதான மூவரும் பலவிதமான பாம்புகளை கொன்று அதன் தோலை விற்பனை செய்து வந்ததாக வனத்துறையினர் தெரிவித்தனர். தாங்கள் எடுக்கும் வீடியோ சமூக வலைதளங்களில் பரவ வேண்டும் என்பதற்காக பாம்பை கடித்து துன்புறுத்தியதாக அவர்கள் வனத்துறை அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.



# அரசு அனுமதி இன்றி விற்பனை செய்யப்பட்ட மது பாட்டில்கள் பறிமுதல்: தப்பி ஓடிய வாலிபருக்கு வலை வீச்சு

ஊத்துக்கோட்டை, ஏப் 6 -

திருவள்ளூர் மாவட்டம், ஆரணி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட புதுப்பாளையம் கிராமம் ஆரணி ஆற்றில் அரசு அனுமதி இன்றி மது பாட்டில்கள் விற்பனை செய்யப்படுவதாக ஆரணி காவல் நிலைய போலீசாருக்கு தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் இருந்தது.



ஆரணி காவல் நிலைய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பாஸ்கர் தலைமையில் போலீசார் அப்பகுதியில் ரோந்து பணி மேற்கொண்டனர். அப்பொழுது புதுப்பாளையம் ஆரணி ஆற்றின் அருகே ஒருவர் மது பாட்டில்களை வைத்துக்கொண்டு விற்பனை செய்து கொண்டிருப்பதை போலீசார் கண்டுபிடித்தனர். எனவே, அங்கு சென்றபோது மது பாட்டில்களை விற்பனை செய்து கொண்டிருந்த பனையஞ்சேரியைச் சேர்ந்த ஆனந்தன் (வயது 35) என்ற வாலிபர் போலீசாரை தரக்குறைவான வார்த்தைகளால் திட்டிவிட்டு அவர்களை கீழே தள்ளிவிட்டு, தப்பி ஓடி விட்டார்.

எனவே போலீசார் அங்கிருந்த 1,020 மது பாட்டில்களை பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்தனர். மேலும், வழக்கு பதிவு செய்து தப்பி ஓடிய வாலிபர் ஆனந்தனை வலை வீசி தேடி வருகின்றனர்.

## சென்னை நீச்சல் குளங்களில்

# 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களை அனுமதிக்க புதிய விதிமுறைகள் வெளியீடு

*சென்னை, ஏப்.6-*

*பெரியமேடு பகுதியில் நீச்சல் பயிற்சியில் ஈடுபட்டிருந்த 7 வயது சிறுவன் உயிரிழந்த விவகாரத்தை தொடர்ந்து மாநகராட்சி புதிய விதிமுறைகளை வெளியிட்டுள்ளது.*

*10 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் நீச்சல் குளத்தில் இறங்க அனுமதியில்லை எனவும் 11 முதல் 14 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் நீச்சல் தெரிந்த பெற்றோர்கள் அல்லது பெரியவர்கள் துணை இல்லாமல் அனுமதிக்கப்பட மாட்டாது எனவும் சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது. 3.5 அடி ஆழத்திற்கு மேல் உள்ள நீச்சல் குளங்களில், 4 அடி உயரத்துக்கு குறைவாக உள்ள சிறுவர்களுக்கு அனுமதி இல்லை எனவும் நீச்சல் குளங்களில் டைவ் அடிப்பது போன்ற சாகசங்கள் செய்ய அனுமதி இல்லை எனவும் சென்னை மாநகராட்சி உத்தரவிட்டுள்ளது.*

*மேலும் குறிப்பிட்ட விதிமுறைகளை கடைப்பிடிக்கவில்லை என்றால், விதிமுறைகளை முறையாக கண்காணிக்காத ஒப்பந்ததாரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என சென்னை மாநகராட்சி எச்சரித்துள்ளது. பெரியமேடு பகுதியில் நீச்சல் பயிற்சியில் ஈடுபட்டிருந்த 7 வயது சிறுவன் உயிரிழந்ததையடுத்து பாதுகாப்பு விதிமுறைகளை முறையாக பின்பற்றாத ஒப்பந்ததாரர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்படும் எனவும் மேலும் நிர்வாக ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.*

# காரைக்காலை சேர்ந்த சமூக சேவகியும் கவிஞருமான அ.கனகவள்ளியின் புதிய சாதனை

காரைக்கால், ஏப். 6 -

புதுச்சேரி மாநிலம் காரைக்காலை சேர்ந்த சமூக சேவகியும் கவிஞருமான அ. கனகவள்ளி. புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வேண்டும் என்ற நோக்குடன் புதுச்சேரி மக்களின் குரலாய், புதுச்சேரி ஆயி மண்டபத்தை, (முகப்பு சின்னம்) ஓவியமாக தொடர்ந்து 12 மணி நேரம் இடைவிடாது வரைந்து அதில் 15,022 முறை "புதுச்சேரி" என்று எழுதி உலக சாதனை படைத்தார்.




புதுச்சேரி மாநில அந்தஸ்து வேண்டி அவர் வரைந்த இந்த ஓவியத்தை புதுச்சேரி ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ் ஹோல்டர் செ.வே. வெங்கடேசன் .மற்றும் உமாராணி, கலைவாணி, சுபாஷினி ஆகியோர் இந்த சாதனையை கண்காணிப்பு செய்தனர். இறுதியாக இச்சாதனை உலக சாதனையாக ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ் ஹோல்டர் உலக சாதனையாக அங்கீகாரம் செய்தார்கள். புதுச்சேரி மாநில அந்தஸ்து வேண்டி ஓவியம் வரைந்து உலக சாதனை படைத்த இவரை பலரும் பாராட்டியும் வாழ்த்து தெரிவித்தும் வருகின்றனர்.

மேலும் இவர் ஆற்றிய சமூக சேவைகளுக்காக பல்வேறு அமைப்புகள் மூலம் பல்வேறு விருதுகள் வாங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருநகரி கல்யாண ரெங்கநாதர் பெருமாள் கோவிலில் திருத்தேர் திரளான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்து சுவாமி தரிசனம்

சீர்காழி, ஏப். 6 -

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே திருநகரியில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றான கல்யாண ரெங்கநாதர் பெருமாள் கோயில் உள்ளது. இங்கு திருமங்கை ஆழ்வார் தனி சன்னதியில் அருள் பாலிக்கிறார்.

கோயிலில் பங்குனி உற்சவம் கடந்த 28ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவின் முக்கிய நிகழ்வாக திருத்தேர் வைபவம் நடைபெற்றது. தேரில் கல்யாண ரெங்கநாத பெருமாள் தாயாருடன் எழுந்தருளினர். இரண்டாவது தேரில் திருமங்கை ஆழ்வார் எழுந்தருளினார்.



இரண்டு தேர்களையும் திரளான பக்தர்கள் வடம் பிடித்து இழுத்து, கோவிந்தா, கோவிந்தா என முழக்கமிட்டனர். தேர் கோவிலின் நான்கு வீதிகளை சுற்றி வந்து நிலையை அடைந்தது. இதில் திரளான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.

# தலைமைச் செயலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தில் திரளாக கலந்து கொள்ள தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி முடிவு

*திருவள்ளூர், ஏப் 6 -*

*தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் எல்லாபுரம் வட்டார கிளை மற்றும் எல்லாபுரம் வட்டார ஆசிரியர் நல அமைப்பின் சார்பில் திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையத்தில் உள்ள ஏ.டி.மஹால் திருமண மண்டபத்தில் முப்பெரும் விழா நிகழ்ச்சி நடைபெற்றது.*





*சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவர் து.இளங்கோ படத்திறப்பு விழா, ஓய்வு பெற்ற எட்டு ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா, மகளிர் தினத்தை முன்னிட்டு ஆசிரியைகளுக்கு நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் விழா என முப்பெரும் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சிக்கு வட்டாரத் தலைவர் பொ.செல்வம் தலைமை தாங்கினார். ஆசிரியர் நல அமைப்பின் வட்டாரத் தலைவர் த.பார்த்திபன், வட்டார பொருளாளர் து.ஆனந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அனைவரையும் ஆசிரியர் நல அமைப்பின் வட்டாரச் செயலாளர் இரா.உதயகுமார் வரவேற்றார். முன்னாள் மாநிலத்தலைவர் து.இளங்கோ படத்தை மாநிலத் தலைவர் குணசேகரன் திறந்து வைத்து இயக்கப்பேருரை ஆற்றினார். ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு பொதுச் செயலாளர் வி.எஸ்.முத்துராமசாமி பொன்னாடை அணிவித்தார். மாநில பொருளாளர் சே.நீலகண்டன் நினைவு பரிசு வழங்கினார். வட்டார மற்றும் மாவட்ட செயலாளர் பா.ராஜாஜி மகளிர் தின விழா போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற ஆசிரியைகளுக்கு பரிசுகளை வழங்கி இயக்க உரை ஆற்றினார்.*

*இதில் முன்னாள் மாநில பொருளாளர்கள் மு.மூர்த்தி, சு.கதிரவன், மாவட்ட தலைவர் ரெ.சா.இளங்கோவன், மாவட்ட பொருளாளர் க.சேகர், மாநில செயற்குழு உறுப்பினர்கள் பார்த்தீபன், வாசுதேவன், மாநில துணைத்தலைவர் வி.பி.ஜெகநாதன், முன்னாள் மாநிலத் துணைத் தலைவர் ஜெ.பாரதிதாசன், வட்டார கல்வி அலுவலர்கள் எ.சாது சுந்தர் சிங், சு.கல்பனா உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினர்.*

*இதில் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டத் துணைத் தலைவர்கள், மாவட்டத் துணைச் செயலாளர்கள், வட்டாரக் கிளை பொறுப்பாளர்கள், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட மகளிர் வலை அமைப்பு நிர்வாகிகள், எல்லாபுரம் வட்டார மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், எல்லாபுரம் வட்டார ஆசிரியர் நல அமைப்பு இயக்குனர்கள், எல்லாபுரம் வட்டார துணைபொறுப்பாளர்கள், எல்லாபுரம் வட்டார செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் இருபால் ஆசிரியர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*

*நிகழ்ச்சியின் நிறைவாக பணி ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் ஏற்புரை வழங்கினர். இதன் பின்னர் இவ்விழாவில், ஜாக்டோ ஜியோ சார்பில் இம்மாதம் 11-ம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை தலைமைச் செயலகத்தை முற்றுகையிட்டு நடைபெறும் போராட்டத்தில் திருவள்ளூர் மாவட்ட தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மற்றும் ஆசிரியர் நல அமைப்பின் சார்பில் திரளாக கலந்து கொண்டு போராட்டத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. நிகழ்ச்சியின் முடிவில், நல அமைப்பின் பொருளாளர் ஏ.சந்திரன் நன்றி கூறினார்.*

# கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக டிராக்டர் வழங்கும் நிகழ்ச்சி



*தென்காசி,ஏப்.6*

*கடையநல்லூர் ஊராட்சிஒன்றியத்திற்கு உட்பட்ட சொக்கம்பட்டி ஊராட்சி மன்றத்திற்கு தமிழக அரசின் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக புதிய டிராக்டர் வழங்கப்பட்டது.*

*நிகழ்ச்சியில் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் பா.சுப்பம்மாள் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கந்தசாமி, ராதா, சொக்கம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பச்சமால், துணைத் தலைவர் செல்வகுமார், திரிகூடபுரம் ஊராட்சி ஒன்றிய குழு கவுன்சிலர் அருணாசல பாண்டியன், புன்னையாபுரம் ஒன்றிய கவுன்சிலர் சிங்கிலிபட்டி மணிகண்டன், சொக்கம்பட்டி ஊராட்சி மன்றச் செயலாளர் ராமர், மற்றும் அரசு அலுவலர்கள் டிராக்டர் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*


## பத்திரம் காணவில்லை

திருச்சி மாவட்டம், மாநகர், பாலக்கரை, 6/11 பொட்டுக்கார தெரு, ஸ்டீபன் ஜெயராஜ் மனைவி சாந்தா ஆகிய நான் கொடுக்கும் அறிவிப்பு:- புதுக்கோட்டை சார் பதிவகத்தில் 971/1975,1228/1975 ஆகிய எண்களாக பதியப்பெற்ற சொத்தின் பத்திரம் கடந்த 18.03.2023 அன்று மதியம் புதுக்கோட்டை வட்டம், முள்ளூர் கிராமத்திற்கு விவசாயப் பணி தொடர்பாக சென்றிருந்த போது திருக்கோகர்ணம் மியூசியம் கடைவீதி அருகே மேற்கண்ட சொத்தின் அசல் ஆவணங்கள் காணாமல் போய்விட்டது இது தொடர்பாக காவல்துறையில் ஆன்லைன் மூலமாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. புகார் எண்கள்:CAS23057829,CAS23057794 எனவே மேற்கண்ட ஆவணத்தை யாரேனும் கண்டெடுத்தால் கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணிற்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்புக்கு:சாந்தா, செல் நம்பர்: 8056988420

### அறந்தாங்கி அருகே மூக்குடி பொற்குடையார் கோவில் திருவிழா

# அன்னதானம் வழங்கிய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்



அறந்தாங்கி,ஏப்.6–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே மூக்குடி கிராமத்தில் பிரசித்தி பெற்றபொற்கொடையார் திருக்கோயில் உள்ளது, தமிழகமெங்கும் பங்குனி உத்திர திருவிழா நேற்று கொண்டாடப்பட்ட்து, ஆண்டுதோறும் பங்குனி உத்திர திருவிழா முதல்நாள் கோயிலுக்கு வருகைதந்த பக்தர்களுக்கு அமைச்சர் மெய்யநாதன் ஏற்பாட்டில் பொங்கல் அன்னதானம் வழங்கப்பட்டது.

அதேபோல பங்குனி உத்திர திருவிழா முதல் நாளான நேற்று சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தனது குடும்பத்தினருடன் கோயிலுக்கு வருகை தந்த பக்தர்களுக்கு பொங்கல் மற்றும் கொண்டைக்கடலை அன்னதானம் செய்தார், நிகழ்ச்சியில் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன் அறந்தாங்கிகிழக்குஒன்றிய செயலாளர் குமார், மணமேல்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் சக்தி ராமசாமி , மாவட்ட கவுன்சிலர் சரிதா மேகராஜன், ஒன்றிய குழு உறுப்பினர் ரவிச்சந்திரன், நகர்மன்ற உறுப்பினர் துளசிராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கந்தர்வக்கோட்டையில் வட்டார அளவிலான

# வானவில் மன்ற போட்டிகளில் மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் அறிவியல் சோதனைகள் செய்து காட்டி விளக்கம்

கந்தர்வகோட்டை, ஏப்.06–

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சே.மணிவண்ணன் வழிகாட்டுதலின் படி தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறையின் சார்பாக மாதம் தோறும் ஒளிபரப்பப்படும், சிறார் திரைப்படம் , பள்ளி நூலகங்களில் மாணவர்கள் வாசிக்கும் புத்தகங்கள் சார்ந்த திறனாய்வுசெய்தல்,பள்ளி மாணவர்களுக்காக தமிழ்நாடு அரசு வெளியிடும் சிறார் மாத இதழான தேன் சிட்டு இதழில் வரும் அறிவுசார் தகவல்கள் சார்ந்த வினாடி வினா போட்டி, வானவில் மன்றம் ஆகியவற்றிற்கான போட்டிகளை மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது.

வட்டார அளவிலான வானவில் மன்ற போட்டிகள் வட்டார வள மையம் கந்தர்வகோட்டையில் நடைப்பெற்றது. இப்போட்டிக்கான ஏற்பாட்டினை வட்டார கல்வி அலுவலர் வெங்கடேஸ்வரி, செய்திருந்தார், வட்டார வள மைய மேற்பார்வையாளர் பொறுப்பு பிரகாஷ் தொடங்கி வைத்தார்.

இந்த போட்டியினை மன்றஒருங்கிணைப்பாளர் ஆ.மணிகண்டன் ஒருங்கிணைத்தார். நடுவர்களாக அறிவியல் பட்டதாரி ஆசிரியர்கள், மு.முத்துக்குமார் காளியம்மாள், ஆகியோர் செயல்பட்டனர். இப்போட்டியில் அன்றாட வாழ்வில் ஒளி என்றதலைப்பில் மாணவ மாணவிகள் அறிவியல் சோதனைகளான ஒளி நேர்கோட்டில்செல்லுதல், ஒளிவிலகல், ஒளியின் பண்புகள், ஒளியின் பாதையில் ஏற்படும் மாற்றங்கள் உள்ளிட்ட அறிவியல் சோதனைகள் மாணவ, மாணவிகள் செய்து காண்பித்தனர்,. ஆர்வத்துடன் பதில் அளித்தனர். இதில் வெற்றி பெற்றவர்கள் மாவட்ட அளவிலான வானவில் போட்டியில் பங்கேற்பார்கள். இந்நிகழ்வில் ஆசிரியர் பயிற்றுநர்கள் சங்கிலி முத்து, இல்லம் தேடிக் கல்வி ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா, ஆசிரியர்கள் தனலெட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.



மதசார்பற்ற ஜனதா தளம் கட்சியின் மாநில பொதுச்செயலாளரும், அகமுடையார் மக்கள் மகா சபை அமைப்பின் மாநில பொதுச் செயலாளருமான எஸ்.எம்.செல்லப்பாண்டியின் 60வது பிறந்தநாள் மதுரை சமயநல்லூர் பகுதியில் கொண்டாடப்பட்டது. விழாவில் பரவை காய்கறி மார்க்கெட் தலைவர் மனுவேல் ஜெயராஜ், துணைத்தலைவர் இஸ்மாயில், பொருளாளர் ஏ.ஜி.எஸ் கணேசன், சமயநல்லூர் சி.மலையாளம், செல்லப்பாண்டியின் நெருங்கிய நண்பர் ராகவன், அப்பகுதிவாழ் பொதுமக்கள், அவரது நண்பர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினர். விழாவில் அவரது நண்பர்கள், உறவினர்கள் மேலும் அப்பகுதிவாழ் ஏழை,எளிய மக்கள் என சுமார் 6000 பேருக்கு அறுசுவை விருந்து அளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



புதுக்கோட்டை அசோக் நகர் ராஜமுருகன் வள்ளி தெய்வானை கோவிலில் பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு ராஜ முருகன் வள்ளி தெய்வானைக்கு பால், தயிர், சந்தனம் உள்ளிட்ட ஒன்பது வகையான அபிஷேக ஆராதனை சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றது. சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க வழிபாடு செய்தனர், பக்தர்கள் விரதம் இருந்து நேர்த்திக்கடனை செலுத்தும் வகையில் பெண்கள் பால்குடம் எடுத்தும், ஆண்கள் அழகு குத்திதியும், காவடி எடுத்தும் மேலதாளம் வானவேடிக்கையுடன் நான்கு வீதிகளையும் வலம் வந்து முழு ராஜமுருகன் வள்ளி தெய்வானைக்கு தரிசனம் செய்தனர் மதியம் பக்தர்களுக்கான அன்னதானம் வழங்கப்பட்டது, இரவு திருக்கல்யாண நிகழ்ச்சி நடைபெற்றது.

# அரியலூரில் நகராட்சி கவுன்சில் கூட்டம் நடைபெற்றது



அரியலூர், ஏப். 6–

அரியலூர் நகராட்சி கவுன்சில் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் நகராட்சி கூட்ட மன்றத்தில் நடைபெற்ற, நகராட்சி கவுன்சிலர்களின் அவசர கூட்டத்திற்கு, நகராட்சித் தலைவர் சாந்தி கலைவாணன் தலைமை வகித்தார், ஆணையர் பொறுப்பு தமயந்தி முன்னிலை வகித்தார், இளநிலை உதவியாளர் செந்தில்குமார் தீர்மானங்களை படித்தார்.

அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு பள்ளிகளில், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு, காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்காக, 25 லட்ச ரூபாய் மதிப்பில் சமையல் கூடம் கட்டுவது.

அரியலூர் நகராட்சிக்கு, 7.80 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டப்படுவதை முன்னிட்டு, தற்காலிக பேருந்து நிலையம் அமைய உள்ள, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை இடத்துக்கு, மாத வாடகையாக 49,000 ரூபாய் வழங்குவது.

அரியலூர் நகராட்சிக்கு அமைக்கப்பட உள்ள தற்காலிக பேருந்து நிலைய வளாகத்தில், பயணிகளுக்கான தற்காலிக நிழல் குடை, அதன் தெற்கு பகுதியில் ரூபாய் 6.20 லட்சம் செலவில் பொது நிதியிலிருந்து கட்டுவது, தற்காலிக பேருந்து நிலையத்திற்கான கழிவறை, ரூபாய் 6.40 லட்சம் மதிப்பில் கட்டுவது. தற்காலிக பேருந்து நிலைய வளாகத்தில் ரூபாய் 6.40 லட்சம் மதிப்பில் கழிவறைக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்துவது, ரூபாய் பத்து லட்சம் செலவில் மின்விளக்கு வசதி ஏற்படுத்துவது. ரூபாய் 1.40 லட்சம் மதிப்பில், தற்காலிக பேருந்து நிலைய வளாகத்தில் கிராவல் மண் கொட்டுவது உள்பட, 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில், அரியலூர் நகராட்சி மேலாளர் சரஸ்வதி, நகராட்சி துணைத் தலைவர் கலியமூர்த்தி, மற்றும் நகராட்சி கவுன்சிலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஆலங்குடியில் காங்கிரஸ் கட்சி கண்டன பொதுக்கூட்டம்



ஆலங்குடி, ஏப். 06–

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் நடைபெற்ற ராகுல்காந்தி மீதான நடவடிக்கைக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கலந்துகொண்டு பேசுகையில்,

பேச்சு சுதந்திரத்தை ஒடுக்கும் போக்கை ராகுல்காந்தி மீதான நடவடிக்கைகள் மூலம் புள்ளி வைத்து தொடங்கியுள்ளது பாஜக. இந்திய வரலாற்றிலே எவ்வித விவாதங்களிலும் கலந்துகொள்ளாத ஒரே பிரதமராக மோடி இருக்கிறார். 2019–ல் ராகுல் காந்தி பேசியதற்கு வழக்கு தொடரப்பட்டது. பின்னர் 2022–ல் வழக்கு தொடர்ந்த வாதியே உயர்நீதிமன்றத்தில் தடை கோரி 1 ஆண்டுகாலம் விசாரணைக்கு தடையும் பெற்றார்.

ராகுல் காந்தி 3500 கிமீ தூரம் பாதயாத்திரை சென்றார். அப்போது, பலமொழி பேசும் மக்கள் அவருக்கு கோடுத்த வரவேற்பும், மக்களவையில், ராகுல் காந்தி எழுப்பிய கேள்விகளுக்கும், குற்றச்சாட்டுகளுக்கும் பதில்சொல்லமுடியாமல், உடனே வாதியிடம் வழக்கு விசாரணைக்கு தடை விதித்த வழக்கை வாபஸ் பெறச்சொல்லி, பிப்27–ல் விசாரணையை தொடங்கி, மார்ச். 23 ஆம் தேதி வழக்கில் தீர்ப்பு, 24ம் தேதி பதவி இழப்பு. இது ஜனநாயகநாடா என சந்தேகம் எழுகிறது.

இவ்வளவு அவசரமாக வழக்கில்தீர்ப்புவழங்கியது ராகுல்காந்தியை எதிர்கொள்ள முடியாத உறுத்தலே காரணம். சட்டம் என்பது வேறு, நீதி என்பது வேறு சட்டம் தள்ளாடலாம், தடுமாறலாம். நீதி எப்போதும் தடுமாறாமல் தலை நிமிரும். வாய்மொழி அவதூறுக்கு 2 ஆண்டுகள் தண்டனை வழங்கப்பட்டது இந்தியவரலாற்றிலே கிடையாது. பேச்சு சுதந்திரத்தை தடுத்து ஜனநாயகத்தின் குரல்வளையை நசுக்குகிறது பாஜக என பேசினார், .கூட்டத்தில் எம்பி கார்த்தி சிதம்பரம் ,முன்னாள் எம்எல்ஏ ராம சுப்புராம்,நகர காங்கிரஸ் தலைவா அரங்குளவன் உள்பட பலா கலந்துகொண்டனா.

# பொன்னமராவதி மலையாண்டி கோவிலில் பங்குனி உத்திரத்தை முன்னிட்டு பக்தர்கள் நேர்த்திக்கடன்



பொன்னமராவதி, ஏப்.6–

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி மிகவும் புகழ்பெற்ற, மிகவும் பிரசித்தி பெற்ற மலையாண்டி கோவில் சுவாமிக்கு பங்குனி உத்திர விழாவை முன்னிட்டு அழகு குத்தி அக்னி பால்குடம் எடுத்தனர். மேலும் வழக்கம் போல் பங்குனி உத்திரத்தை முன்னிட்டு நேற்று பக்தர்கள் அழகு குத்தி தலையில் பால்குடம் சுமந்து அக்கினியில் இறங்கி நேர்த்திக்கடனை செலுத்தினர்.

இவ்விழாவால் ஏராளமான பக்த கோடிகளுடன் விழா சிறப்பாக நடைபெற்றது, இதில் கிராமப்புற மக்கள் மற்றும் நகர்ப்புறமக்கள், நாட்டார்கள், நகரத்தார்கள், மற்றும் ஏராளமான பக்த கோடிகள் இவ்விழாவில் கலந்து கொண்டு மலையாண்டி சுவாமியின் அருளை பெற்றனர்.

# புதுக்கோட்டை குமரமலை பாலதண்டாயுதபாணி கோயிலில் பங்குனி உத்திர விழா சிறப்புவழிபாடு விமர்சையாக நடைபெற்றது



புதுக்கோட்டை,ஏப்.6–

புதுக்கோட்டை குமரமலை பாலதண்டாயுதபாணி கோயிலில் பங்குனி உத்திர விழா சிறப்புவழிபாடு விமர்சையாக நடைபெற்றது.

இதையொட்டி கோயிலில் முருகப் பெருமானுக்கு சிறப்பு அலங்காரம் செய்து பூஜைகள் மற்றும் ஆராதனைகள் நடைபெற்றன.

புதுக்கோட்டை அருகிலுள்ள குமரமலை ஸ்ரீ பாலதண்டாயுதபாணி கோவிலில் பங்குனி உத்திர விழாவையொட்டி பக்தர்கள் அலகு குத்தியும், மஞ்சள் ஆடை உடுத்தியும், பால்குடம் ஏந்தியும், கரும்புத் தொட்டிலில் குழந்தையை ஏந்தி கோவிலுக்கு ஊர்வலமாக வந்து, பொங்கல் வைத்தும் பக்தர்கள் நேர்த்திக்கடனை நிறைவேற்றினர். ஆலயத்தில் ஸ்ரீ பாலதண்டாயுதபாணி சுவாமிக்கு ,பாலபிஷேகம், பன்னீர், தயிர், பஞ்சாமிர்தம்,இளநீர் சந்தனம், மஞ்சள் நீர், திருநீர் உள்ளிட்ட பூஜை பொருட்களில் சிறப்பு அபிஷேகம் மற்றும் சந்தன காப்பு மலர் அலங்காரத்தில் தீபாராதனை . நடைபெற்றது, அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை பாலாஜி சிவாச்சாரியார் மற்றும் கோயில் ஊழியர்கள் செய்திருந்தனர் பொதுமக்கள், பக்தர்கள் திரளானோர் வந்திருந்து வழிபட்டனர்.

# தென்காசியில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்



தென்காசி,ஏப்.6–

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலம் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர சைக்கிள் தலா 13 ஆயிரத்து 500 வீதம் ஆக மொத்தம் 27 ஆயிரம் மதிப்பில் உதவி உபகரணங்களும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கோரிக்கை மனு அளித்த இரண்டு மாற்றுத் திறனாளிகளில் ஒரு மாற்றுத்திறனாளிக்கு ரூபாய் 13 ஆயிரத்து 500 மதிப்பில் மூன்று சக்கர சைக்கிளும் மற்றொரு மாற்றுத்திறனாளிக்கு ரூபாய் 8500 மதிப்பில் காதொலி கருவியும் மாவட்ட ஆட்சியர் கோரிக்கை மனுவை ஏற்று உடனடியாக வழங்கினார்.

செங்கோட்டை வட்டத்தில் வசித்து வரும் விளிம்பு நிலையில் உள்ள திருநங்கைகளுக்கு தென்காசி வட்டம் கல்லூரணி குறுவட்டம் பாட்டாக்குறிச்சி கிராமம் அரசு புறம்போக்கு நிலத்தில் ஐந்து நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாவும், கல்லூரணி குறுவட்டம் பாட்டாக்குறிச்சி கிராமம் அரசு புறம்போக்கு நிலத்தில் 9 நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாவும் மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் வழங்கினார்.

# சென்னை நங்கநல்லூர் கோயில் தீர்த்தவாரி உற்சவத்தில் குளத்தில் மூழ்கி 5 அர்ச்சகர்கள் பலியான சோகம்



சென்னை, ஏப்.6–

சென்னை நங்கநல்லூர் கோயிலில் சாமியை குளிப்பாட்டும் போது குளத்தில் மூழ்கி 5 அர்ச்சகர்கள் உயிரிழந்தனர்.

சென்னையில் தாம்பரம் அருகே உள்ள தர்மலிங்கேஸ்வரர் கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு, தீர்த்தவாரி நிகழ்ச்சி நடைபெறுவது வழக்கம். அதன் படி பங்குனி உத்திர திருவிழா தீர்த்தவாரி நிகழ்ச்சி நேற்று முவசரன்பேட்டை குளத்தில் நடைபெற்றது. இந்த குளத்தில் கோயில் தீர்த்தவாரியின் போது சுவாமி சிலையையும் சில அர்ச்சனை பொருட்களையும் நீரில் மூழ்கி எடுக்க அர்ச்சகர்கள் 25 பேர் குளத்தில் இறங்கினர். அப்போது அவர்கள் 2 முறை சுவாமி சிலையையும் அர்ச்சனை பொருட்களையும் மூழ்க வைத்து அவர்களும் மூழ்கினர், அதில் 3 ஆவது முறை அவர்கள் மூழ்கும் போது ஒரு அர்ச்சகரின் கால்கள் சேற்றில் சிக்கி அவர் தத்தளித்தார். இதை கண்ட மற்ற அர்ச்சகர்கள் பதறியடித்தபடி அவரை காப்பாற்ற முயன்றனர். இதில் அந்த அர்ச்சகர்களும் நீரில் தத்தளித்தபடியே மூழ்கினர்.

அவர்களை படகு மூலம் தேடியதில் முதலில் 4 அர்ச்சகர்களின் உடல்களை மீட்டெடுத்து உள்ளனர். இதில் ராகவன்(18) சூர்யா (22) பானேஷ் (22) யோகிஸ்வரேன் (21) ஆகியோரின் உடல்கள் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதையடுத்து 5ஆவதாக ஒருவரின்உடலும்கிடைத்தது. உயிரிழந்தவர்களின் உடல்கள் குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. இந்தச் சம்பவம் குறித்து குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அமைச்சர் தா.மோ. அன்பரசன் நேரில் சென்று ஆய்வு செய்தார், அதன்பின்னர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது,

முதலில் ஒருவர் மட்டுமே ஆழமான பகுதிக்குள் தவறி விழுந்துள்ளார். அப்போது அருகில் இருந்தவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்துள்ளனர் இதில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். 5 பேரும் 20 முதல் 25 வயது கொண்ட படித்த இளைஞர்கள். தகுந்த பாதுகாப்பு இல்லாமல் நிகழ்வை நடத்தியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. தகுந்த பாதுகாப்புடன் இந்த நிகழ்வை நடத்தி இருக்க வேண்டும். நான் சட்டமன்றத்தில் இருந்தபோது இந்தத் தகவல் வந்தது. உடனடியாக முதல்–அமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்றேன். முதல்–அமைச்சர் நேரில் செல்லுங்கள் என்று கூறினார். முதல்–அமைச்சரின் சார்பில் 5 பேரின் குடும்பத்தினருக்கும் இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இது இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத கோயில். நிகழ்வுக்கு முன்பாக காவல்துறைக்கு முறையாக தகவல் அளிக்கப்பட்டதா, இல்லையா? என்பது குறித்து விசாரணை நடத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# நானும் டெல்டாகாரன்தான் சட்டசபையில் முதல்வர் ஒப்புதல்

# நிலக்கரி சுரங்கப் பிரச்சனையை தீர்க்க ஈபிஎஸ் யோசனை





# பாம்பு தலையை கடித்து துப்பிய 3 பேர் சிறையில் அடைப்பு


சென்னை / புதுக்கோட்டை | 06.04.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

மீனாட்சி சுந்தரம் பிள்ளை , தமிழகத் தமிழறிஞர் (பி.1815) (இ.1876)



ராம. அழகப்பச் செட்டியார் , தமிழகத் தொழிலதிபர், வள்ளல் (பி.1909) (இ.1957)



கோ. நம்மாழ்வார் , தமிழக இயற்கை ஆர்வலர் (பி.1938) (இ.2013)



## இன்றைய நினைவு நாள்

இல. செ. கந்தசாமி , தமிழகத் தமிழறிஞர், இதழாளர் (பி.1939) (இ.1992)



தேவிலால் , இந்திய அரசியல்வாதி (பி.1914) (இ.2001)



தி. ந. இராமச்சந்திரன் , தமிழறிஞர் (பி.1934) (இ.2021)



## அபிவிருத்திக்கும் அமைதிக்குமான பன்னாட்டு விளையாட்டு நாள்

ஏப்ரல் 08,09
சனி, ஞாயிறு
2 நாட்கள்

5-ம் ஆண்டு

புதுகை **வரலாறு** நாளிதழ் நடத்தும்

# கல்வி கண்காட்சி

10 & +2 மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி

இடம் : விஜய் பேலஸ் A/C புதுக்கோட்டை
நேரம் : காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

அனைவரும் வாருங்கள் அனுமதி இலவசம்

**முன்னணி கல்வி நிறுவனங்கள் பங்குபெறும் பிரம்மாண்டமான கண்காட்சி**

வரலாற்று சிறப்பு மிக்க நம்முடைய புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த **மாணவ கண்மணிகள்** அரசு பொதுத்தேர்வை எழுதிக் கொண்டிருக்கக்கூடிய இச்சூழலில் அவர்களின் **உயர்கல்விக்காக தமிழ்நாட்டில்** மட்டுமில்லாமல் **அண்டை மாநிலங்களில்** இருக்கக்கூடிய பிரபல **முன்னணி கல்வி நிறுவனங்கள்** ஒரே இடத்தில் சங்கமிக்கும் **உயர் கல்விக்கு வழிகாட்டும் இத்திருவிழாவை** கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு தங்களின் ஆசியுடன் சிறப்பாக நடத்த உள்ளோம். இந்த நிகழ்ச்சியில் **10** மற்றும் **12** ஆம் வகுப்பு மாணவர்கள் தங்கள் **பெற்றோர்,** மற்றும் **உறவினர்களுடன்** பங்கேற்று தங்களுக்கு உண்டான அனைத்து சந்தேகங்களையும் கண்காட்சியில் பங்கேற்கும் சம்பந்தப்பட்ட **துறை வல்லுனர்களுடன்** கலந்துரையாடி உரிய தீர்வுகளை பெற்று **தலைசிறந்த கல்வி நிறுவனத்தில் தங்களுடைய உயர்கல்வி கனவை துவங்கி எதிர்கால இந்தியாவை உலக அரங்கில் தலை நிமிரச்செய்திட வாரீர்**

தங்களை மகிழ்விக்க வரவேற்றுக் காத்திருக்கின்றோம் !
வாருங்கள் நேரில் சந்திப்போம்!

இரண்டு நாட்களும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை **மாணவ, மாணவியரின்** தனி மற்றும் குழுவினர் (ஆண், பெண் தனித்தனியாக) **பாட்டு, நடனம் உள்ளிட்ட கலை விழாக்கள்** நடைபெறும். இதில் பங்கேற்க விரும்புவோர் ஏப்ரல் 8-ம் தேதி சனிக்கிழமை **காலை 8.00 மணி முதல் 11.30 மணி வரையில் கண்காட்சி** நடைபெறும் இடத்தில் வரவேற்பறையில் மட்டும் பதிவு நடைபெறும். பயன்படுத்திக் கொள்ளுங்கள் மேடையேறும் அனைவருக்கும் ரொக்கப் பரிசு காத்திருக்கின்றது.

*மாணவர்களுக்கான சந்தேகம் மற்றும் ஸ்டால் புக் செய்ய*

**98420 98534**
**63833 51422**
**88381 73645**
**97154 54081**

அதிர்ஷ்டசாலிகளுக்கு
## லேப்டாப் பரிசு



நடப்பு ஆண்டு +2 தேர்வு எழுதியுள்ள மாணவ கண்மணிகள் நேரில் வருவோரின் வருகையை மட்டும் பதிவு செய்து கொண்டு **குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று** நபர்களுக்கு மதர் தெரசா கல்வி நிறுவனம் சார்பில் **லேப்டாப்** பரிசளிக்கப்படும்

+2 மாணவ செல்வங்கள் மட்டும் அடையாள அட்டை & ஹால் டிக்கெட் நகல் ஒன்றை கொண்டு வர வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு **மார்ச் மாதம் 27** -ஆம் தேதிக்கு பிறகு, **வரலாறு** நாளிதழ்

www.varalaruu.com இணையதளத்தை பார்க்கவும்.

கண்காட்சியில் கலந்து கொள்ளும் அனைத்து மாணவ செல்வங்களுக்கும் **வரலாறு** நாளிதழ் வழங்கும் ஆச்சரியமூட்டும் அன்பளிப்பு காத்திருக்கின்றது.

நிகழ்ச்சியை இணைந்து நடத்துவோர்

SR BLUE METALS®
SR புளூ மெட்டல்ஸ்

பேக்கரி மஹராஜ்
புதுக்கோட்டை

முத்துமீனாட்சி மருத்துவமனை
புதுக்கோட்டை

விஜய் நிறுவனங்கள்
புதுக்கோட்டை

ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்

KMS HAKKIM
PUDUKKOTTAI BRANCH
புதுக்கோட்டை